**அம்பாந்தோட்டை பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே விபரங்கள் தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 5,350,189 தொகையான பங்களிப்புப் பணம் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) தெமடஅத்த வெவ வீதி, இடதுபக்க முதலாவது குறுக்கு வீதியின் குழாய் வழி நீரினை விரிவுபடுத்தும் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த மற்றும் செலுத்தப்பட்டிருந்த ரூபா 577,116 தொகையான பணத்தை நானாவித வைப்புக் கணக்கிற்கு வரவு மற்றும் செலவு வைத்தமையினால், அந்த பெறுமதி ஆண்டினது வருமானம் மற்றும் செலவிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களிலிருந்து மீளளிப்பு செய்யும் அடிப்படையில் சபையின் நிதியத்தினை ஈடுபடுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 572,974 தொகையான 3 பணிகளுக்குரியதாக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மயுரபுர வாரச்சந்தையின் விற்பனைக்கூடங்களை நிர்மாணிக்கும் பணிக்காக ரூபா 542,246 தொகை குறைவாக கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) ரூபா 92,346 தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கடன் கொடுத்தோர் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமையினால் ரூபா 90,746 தொகையான மீதி கடன் கொடுத்தோர் பதிவேட்டில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் அறவிடப்பட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 26,050 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் புதிய சபை கட்டிடத்திற்காக மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த 202 அலகுகளைக் கொண்ட அலுவலக உபகரணங்களின் இருப்பினது பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 15,685,859 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2003 ஆம் ஆண்டின் போது இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 27,650 தொகையான இடர் கடன் மீதி மற்றும் 2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 736,929 தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டண மீதி ஆகியவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 5,109,491 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,182,923 தொகையான மூன்று வகையான வரிகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 20,835,941 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு, வருடாந்த மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள் மற்றும் பட்டோலைகள், ரூபா 7,877,272 கூட்டுத்தொகையான நிலுவை கைத்தொழில் கடன்பட்டோர் மீதிகளுக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட தொழிற்சாலை பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வும், ரூபா 383,673 கூட்டுத்தொகையான விவித கடன் கொடுத்தோர் மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிராமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 103, 104, 105, மற்றும் 110 | சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று விபத்திற்குள்ளானமையால் ஏற்பட்டிருந்த ரூபா 133,275 தொகையான நட்டம் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு, பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு அவர்களிடம் குறித்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 210(1) | 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 160,345 தொகையான நீர்க் கட்டணங்களை செலுத்தும் போது கழிவினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 156 (1) மற்றும் 210 (2) | கொடுப்பனவுகளை தயாரித்து மேற்கொண்டமையின் காரணத்தால் ஏதேனுமொரு தாமதக் கட்டணத்தை செலுத்த நேருமாயின், அந்த பணம் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் செலுத்த நேர்ந்திருந்த ரூபா 7,546 தொகையான தாமதக் கட்டணம் தொடர்பில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 396 (ஈ) | வழங்கி கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியான காலத்தினை விஞ்சியிருந்த ரூபா 88,515 தொகையான 09 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 571 (3) | 2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,285,498 கூட்டுத்தொகையான வைப்பு மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டினுள் மூலதன செலவினங்களுக்கான ஒட்டுமொத்த நிதியேற்பாடு ரூபா 4,215,000 ஆக இருந்த போதிலும், மூலதன செலவின விடயங்களின் கீழ் ரூபா 4,799,082 ஆக இருந்த போதிலும், மூலதன செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டு ரூபா 1,067,885 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதி ஒதுக்கீட்டு எல்லையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,646,467 தொகையான செலவினத்தை ஈடு செய்வதற்கு 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 14 (1) மற்றும் 14 (2) இன் ஏற்பாடுகளுக்கமைய தேவையான நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,821,455 ஆக

இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,205,098 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 10,026,553 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டெழும் வருமானத்தில் 90 சதவீதமான உயர்வான பெறுமதியில் மீண்டெழும் செலவினம் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் சுயமாக உருவாகும் வருமானத்தினை விஞ்சி கவனத்திற் கொள்ளக்கூடிய பெறுமதியான மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டின் போது அந்த பெறுமதி சுயமாக உருவாகும் வருமானத்தைப் போன்று இரு மடங்கினை விஞ்சியுள்ளதாகவும், வருமான உதவு தொகை கிடைத்திருக்கவில்லையாயின், சபையின் வருமானத்தைக் கொண்டு எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடு செய்ய முடியாத நிலையொன்று உருவாகியுள்ளமையும், செலவினக் கட்டுப்பாடு தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதையும் காட்டியது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் வருமானங்களை சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ரூபா 17.01 மில்லியன் தொகையான மொத்த மீண்டெழும் வருமானத்தில் ரூபா 11.34 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானத்தை சேகரித்தலின் செயன்முன்னேற்றம் 67 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 18.2 மில்லியன் தொகையான பெற வேண்டிய வருமானங்களில் ரூபா 4.62 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தின் அறவீட்டின் செயன்முன்னேற்றம் 25 சதவீதமான பெறுமதியினை கொண்டிருந்தது.

**2.3.2 வீதவரியும் வரியும்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை வீதவரியின் மீதி ரூபா 820,493 ஆக இருந்ததுடன், ரூபா 2,500 இற்கு மேற்பட்ட நிலுவை மீதிகளுடனான 65 வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 445,542 கூட்டுத்தொகையான மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 (1) (அ) பிரிவிற்கமைய நிலுவை வீதவரியினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2009 யூலை மாதத்தின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சூரியவெவ 100 அடி பாதையின் திஸ்ஸபுரவிலுள்ள 12 கடைகளுக்காக மதிப்பீட்டு அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாமல் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 6 கடைகளிலிருந்து மாதமொன்றிற்கு ரூபா 250 படியும் எஞ்சிய 6 கடைகளிலிருந்து மாதமொன்றிற்கு ரூபா 300 படியும் அறவிடப்பட்டவாறு இருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க மாகாண நிர்வாக ஆணையாளரின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கமைய 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட குத்தகை தொகையினை புதிய மதிப்பீட்டாளர்

ஒருவரூடாக மாற்றியமைக்க வேண்டிய போதிலும், அதற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 152 (2) ஆம் பிரிவிற்கமைய பல்வேறு தொழிற்துறைகள் தொடர்பில் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், வழக்கறிஞர், மருத்துவர், நொத்தாரிசு மற்றும் பதிவாளர் போன்ற தொழிலில் ஈடுபட்டுள்ளோரிடமிருந்து அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிட மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலுவையாக காணப்படும் ரூபா 736,930 தொகையான அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 களியாட்ட வரி**

அம்பாந்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பறவைகள் பூங்கா மற்றும் உலர்வலய பூங்காவினை பார்வையிடுவதற்கு விற்பனை செய்யப்படும் நுழைவுச்சீட்டுக்களில் களியாட்ட வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நீதிமன்ற தண்டப்பணங்களுக்காக ரூபா 4,456,802 தொகையும், முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 12,986,375 தொகையும் பெற வேண்டியதாக காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிககாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையின் பணிப்பொறுப்பினை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பிரதேசத்தினுள் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பணி மற்றும் கருத்திட்டம் உள்ளடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டின் மூலம் பௌதீக திட்டங்கள், வீதிகள் , காணி மற்றும் கட்டிடங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,000,000 தொகையான மூலதன வருமானம் மற்றும் ரூபா 3,965,000 தொகையான மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த மூலதன வருமானம் கிடைக்கும் விதம் மற்றும் ரூபா 1,965,000 தொகையான மூலதன செலவினம் எந்த பணிக்காக ஈடுபடுத்தப்பட்டது என்பது தொடர்பில் குறிபிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் செயற்திட்டம் - 2016 இன் கீழ் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு நுழையும் வீதிகளை இனங்காணல் மற்றும், 05 பெயர்ப்பலகைகளை தயாரிப்பதற்காக திசெம்பர் மாதம் ரூபா 187,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையிலும் அந்த பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான இரு உழவு இயந்திரங்கள் மீளாய்வாண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது காணப்பட்டது.

(ஆ) ரூபா 500,000 கிரயமான 12.5 KV டீசல் மின்பிறப்பாக்கி 07 வருட காலமாகவும், கொன்கிறீட் கலக்கும் இயந்திரம் 2015 நவம்பர் மாதம் தொடக்கமும் செயலற்று காணப்படுகின்ற போதிலும், பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

----------------------------------------------------------

30 வருட காலமாக சபையின் அலுவலகம் நடாத்திச்ச செல்லப்படும் காணியினதும், ஏனைய காணிகளினதும் உரித்தினை சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 வாகனக் கட்டுப்பாடு**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான வாகனக்குழாமின் 30 இற்கு மேற்பட்ட வாகனங்கள் உள்ளடங்கியிருந்த போதிலும், அவற்றின் தகவல்களை உள்ளடக்கி சொத்துக்கள் பதிவேடு பராமறிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு கிடைத்து நீண்ட காலம் கடந்திருந்த 14 வாகனங்களின் உரித்தினைக் கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைக்கமைய ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது சபைக்கு சொந்தமான எந்தவொரு வாகனத்தினதும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாமல் 16 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------

அரச சார்பற்ற அமைப்பொன்றினால் 2007 ஆம் ஆண்டின் போது சபைக்கு வெகுமதியளிக்கப்பட்டிருந்த நடமாடும் வாசிகசாலை பேரூந்து 2013 ஆம் ஆண்டு தொடக்கம் விளைவற்றுக் காணப்பட்டது. 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி கிடைத்த சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பேரூந்தினை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு பொருத்தமான வகையில் இருக்கைகள் பொருத்தப்பட்டு நவீனமயப்படுத்துவதற்கு மற்றும் சீராக்கி முறைமையை பழுதுபார்ப்பதற்காக ரூபா 555,250 தொகை 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அத்திகதி முதல் 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.

**3.6 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் உருவாகும் கழிவின் அளவு தொடர்பில் கணப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் சபையினால் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட 23 கிராம சேவகர் பிரிவுகளில் 03 பிரிவுகளை உள்ளடக்கி சுமார் 01 தொன் அளவான குப்பைகள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்றன. நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து கூட்டெரு தயாரிக்கப்படுவதுடன், எஞ்சிய திண்மக்

கழிவானது புருதென்கந்த பொல்ஹிந்த பிரதேசத்தின் 05 ஏக்கர் பரப்பளவான சபைக்கு சொந்தமான காணியில் அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) திண்மக்கழிவினை மீள் சுழற்சிக்குட்படுத்தும் செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சூழல் அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பதவியணியினர் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியில் 05 பதவிகளில் மிகையொன்றும் மேலும் 05 பதவிகளில் ஆறு பேருக்கான வெற்றிடமும் நிலவியது. மிகை பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும், வெற்றிடங்களை நிரப்பவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதமைமையும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 06 விடயங்களுக்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 85,000 கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாட்டிலான சேமிப்புகளும், 05 செலவின விடயங்களின் ரூபா 7,238,259 கூட்டுத்தொகையான சேமிப்பும், 04 வருமான விடயங்களின் அடையப்படாத ரூபா 10,642,201 தொகையான இலக்குகளும் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே ஆம் இலக்க தென் மாகாண நிர்வாக ஆணையாளரின் சுற்றறிக்கைக்கமைய மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பிரதேச சபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் செயற்படல்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009 (1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கைக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றினை நியமிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு